DEPOSITION OF WITNESS
---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 55/2017 |
| Deposition of Witness for | : | P.W. 9 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சேகர் முனியப்பன் |
| Father's Name | : | அழகப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025

**முதல் விசாரணை:**

1. நான் சார்பு ஆய்வாளராக திருகோஷ்டியூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து கடந்த 2020ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று காரைக்குடியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடத்தில் நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தென்னீர்வயல், காஞ்சரவயல் கிராமத்தை சேர்ந்த முருகேசன் மனைவி செல்வி என்பவர் 02.03.2015ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தென்னீர்வயல் கிராமத்தை சேர்ந்த முத்து மகன் மனோகரன் என்ற மகாலிங்கம் என்பவர் தனது கணவருக்கு பாத்தியமான தென்னீர்வயல் முத்துப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள நான்கு பங்காளிகளுக்கு பொதுவான கொல்லையில் தனித்தனியாக தென்னங்கீற்று கொட்டகை கட்டி பராமரித்து வந்த நிலையில், கடந்த 02.03.2015ம் தேதியன்று புகார்தாரரின் தென்னங்கீற்று கொட்டகையை தீ வைத்து எரித்து விட்டு ஓடிவிட்டதாகவும், அதை ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு நான்

அப்படித்தான்டி தீ வைப்பேன் தேவிடியா முண்டைகளா, அப்படியே ஓடி வந்து தன் கையில் வைத்த அருவாளை காட்டி கொலை மிரட்டல் காட்டினார், அதனை தொடர்ந்து பிள்ளைகளையும் கொலை செய்வதாக மிரட்டினார் என்று கொடுத்த புகார் மனுவின் பெயரில் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண். 112/2015, பிரிவு 436, 294(பி), 506(2) இ.த.ச வாக வழக்கு பதிவு செய்து, மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1. புகார் கொடுப்பதற்கு யார் யார் வந்தார்கள் என்றால் செல்வி மட்டும் வந்தார். மேற்படி வழக்கில் எந்தவொரு பொருளும் திருடு போகவில்லை என்றால் சரிதான். நான் பொய்யான புகாரை பெற்று, தவறான முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.